கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 90/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | வயது | 69 |
| தந்தை பெயர் | முத்துகுமாரசாமி | ஜாதி | |
| தொழில் | காய்கறி கடை | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( 2 முதல் 6 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 1 வது எதிரி சார்பில் குவிமுச 317 ன் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மாங்குடியில் வசித்து காய்கறி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2021 ஆம் வருடத்தில் ஒரு நாள் திருவாரூர் போலீசார் என்னிடம் காட்டப்படும் கையொப்பத்தை கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன். எங்கு எதற்காக போட்டேன் என்று தெரியாது. அதில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. (**பார்வை மகசரில் 1 வது கையொப்பம் அசா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் 15.01.2021 ம் தேதி மதியம் அசா.1 க்கும், ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை நடந்த இடத்தை பார்வையிட்டு போலீசார் என் முன்னிலையிலும், முருகானந்தம் என்பவர் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்தார்கள் என்றும், நானும், முருகானந்தம் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 90/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகானந்தம் | வயது | 46 |
| தந்தை பெயர் | வெங்கடேசன் | ஜாதி | |
| தொழில் | சிமெண்ட் கடை | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( 2 முதல் 6 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 1 வது எதிரி சார்பில் குவிமுச 317 ன் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் மாங்குடியில் வசித்து சிமெண்ட் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2021 ஆம் வருடத்தில் ஒரு நாள் அசா.1 ன் கடைக்கே அருகே வைத்து திருவாரூர் போலீசார் என்னிடம் காட்டப்படும் கையொப்பத்தை கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன். எங்கு எதற்காக போட்டேன் என்று தெரியாது. அதில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. (**பார்வை மகசரில் 2 வது கையொப்பம் அசா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் 15.01.2021 ம் தேதி மதியம் அசா.1 க்கும், ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை நடந்த இடத்தை பார்வையிட்டு போலீசார் என் முன்னிலையிலும், சண்முகம் என்பவர் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்தார்கள் என்றும், நானும், சண்முகமும் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.